International Forum for Information Technology in Tamil
உலகத்தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றம்

**ஊடக அறிக்கை   சென்னை 29.10.2022**

**உத்தமம் நிறுவனத்தின் 21வது உலகத்தமிழ் இணைய மாநாடு**

ஆங்கிலத்தில் INFITT (International Forum for Information Technology in Tamil ) என்றும் தமிழில் உத்தமம் என்றும் அறியப்படும் உலகத்தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றம் தன்னுடைய 21வது உலகத்தமிழ் இணைய மாநாட்டினை வருகிற 2022 டிசம்பர் 15 முதல் 17 வரை தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து நடத்துகிறது.

இது தொடர்பிலான ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு சென்னை பத்திரிகை மன்றத்தில் இடம்பெற்ற வேளை உத்தமம் நிறுவனத்தின் தற்போதைய தலைவர் இலங்கையினை சேர்ந்த திரு.த.தவரூபன், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் திருவள்ளுவன் மற்றும் உத்தமத்தின் முன்னாள் தலைவர் அண்ணாமலை பல்கலைக்கழகம் முனைவர் மா. கணேசன் , உத்தமம் செயல் இயக்குனர் முனைவர் இ.பொன்னுசாமி ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

இந்த மாநாட்டின் முக்கியக் கருப்பொருளாகத் “தொழில்துறை 5.0 இல் தமிழின் பங்கு” (Tamil in Industry 5.0) என இருக்கும் எனவும் தொழிற்துறையில் ரோபோக்களின் ஆதிக்கம் மேலோங்கி செயற்கை நுண்ணறிவுத்திறன் பயன்பாடு அதிகரித்து வருகின்ற தொழிற்புரட்சியின் 5வது பரிணாமம் பேசப்பட்டுக்கொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் தமிழினை இங்கு எவ்வாறு பிரயோகம் செய்யலாம் உட்புகுத்தலாம் என்பது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்படுவதாக ஆய்வுகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இம்மாநாட்டில் தமிழ் ரோபாட்டிக்ஸ், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயற்கை மொழி ஆய்வுகள் ஆகிய தலைப்புகளில் இந்தியா இலங்கை மலேசியா அமெரிக்கா மற்றும் உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்களின் தமிழ் மற்றும் கணினி அறிவியல் துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் கட்டுரைகளைப் படைக்கவிருக்கிறார்கள். அத்துடன் பல்வேறு தலைப்புக்களில் சிறப்பு பேச்சுக்களுக்கும் பேராளர்கள் பல்வேறு நாடுகளில் இருந்தும் அழைக்கபட்டுள்ளனர்.அத்துடன் மாணவர்கள் மற்றும் பயிலுனர்களுக்காக திறவூற்று மென்பொருள்கள் குறித்த பயிற்சி பட்டறைகளும் மாநாட்டின் ஓர் அங்கமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழில் உருவாக்கப்பட்ட மென்பொருள்கள் மற்றும் அவை சம்பந்தமான படைப்புக்கள் குறித்த கண்காட்சியும் ஒழுங்கு செய்யப்படுகின்றது.

இம்முறை மாநாட்டு நிகழ்ச்சிக்குழு இரண்டு பிரிவுகளில் அமைக்கப்பட்டு ஆய்வுகளும் நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றது . கணினி மொழியியல் இலக்கியம் கல்வெட்டு விடயங்களுக்கான பிரிவு அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த முனைவர் வாசு ரெங்கநாதன் மற்றும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பாரீஸ் பல்கலைக்கழக முனைவர் அப்பாசாமி முருகையன் தலைமையிலும்

இயற்கை மொழி செயலாக்கம், குரல் வழி சொல்லாக்கம் செயற்கை நுண்ணறிவு திறன் விடயங்களுக்கான பிரிவு அண்ணாமலை பல்கலைக்கழக முனைவர் மாரப்ப கணேசன், அண்ணா பல்கலைக்கழகத்தின் ஏயூ-கேபிசி முனைவர் சுபலலிதா மற்றும் யாழ் பல்கலைக்கழக முனைவர் கெ.சர்வேஸ்வரன் தலைமையிலும் பல்வேறு துறைசார்ந்தவர்களும் உள்வாங்கப்பட்டு குழுக்கள் அமைக்கப்பட்டு மாநாட்டு நிகழ்ச்சிக்குழுக்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன .

கணினியில் தமிழின் பயன்பாடு, சங்க காலம் முதல் தற்காலத் தமிழ் வரையிலான தமிழ் இலக்கியங்களைத் தேடுதல், தமிழ் ரோபோடிக்ஸ் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய தமிழ்க் கணிப்பொறி குறித்த ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழ் மொழி மற்றும் இலக்கியம் மற்றும் கணினி அறிவியல் அறிஞர்கள் இம்மாநாட்டில் படைக்கவுள்ளனர். தமிழ் கற்பித்தல், இயந்திர மொழிபெயர்ப்பு, தமிழ் உரை முதல் பேச்சு வரை, உலகம் முழுவதும் கணினி மூலம் தமிழ் கற்பித்தல் ஆகியன இம்மாநாட்டில் கலந்துரையாடப்படும் மற்ற ஆய்வுத் தலைப்புகள் ஆகும்.

கூகுள், மைக்ரோசாப்ட், ஆரக்கிள், யூனிகோட் போன்ற நிறுவனங்களில் இருந்தும் ஆராய்ச்சியாளர்கள் தங்களது ஆய்வுகளை நேரிலும் இணைய வழியிலும் வழங்க உள்ளனர். உத்தமம் அமையத்தின் மாநாட்டு இணையத்தளமான https://tamilinternetconference.org என்ற இணைய முகவரியில் மாநாடு சம்பந்தமான முழு விபரங்களும் வழங்கப்பட்டுள்ளது. சிறப்பு பேச்சாளர்களின் விவரங்கள் அவர்களின் படைப்புகளின் சுருக்கங்கள் , மற்றும் நிகழ்ச்சிக்குழுக்களின் விபரங்கள் இவ்விணையத்தளத்தில் வழங்கப்பட்டுள்ளது. விரைவில் நிகழ்ச்சி நிரல் மற்றும் ஏற்றுக்காள்ளப்பட்ட கட்டுரைகள் விபரங்கள் வெளியிடப்படும்.

இலங்கை .மலேசியா, மோரிசு, சிங்கப்பூர், அமெரிக்கா, பிரான்ஸ், செக் குடியரசு மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள், தமிழ்க் கணிப்பொறியில் தங்களின் தற்போதைய ஆய்வுகளை முன்வைக்கின்றனர். உத்தமம் நிறுவனத்தின் மாநாடுகள் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்குத் தங்களின் படைப்புகளைப் பகிர்ந்துகொள்ளும் சிறந்த இடமாக இருந்து வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் கலிபோர்ணியாவை தலைமையகமாக கொண்டியங்கும் இந்நிறுவனம் உயர்கல்வி பற்றிய ஆராய்ச்சியின் முன்னோடியான மறைந்த பேராசிரியர் எம். ஆனந்தகிருஷ்ணன் அவர்களால் நிறுவப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த மாநாடுகள் மூலம் இதுவரை சுமார் 1100 கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. உத்தமத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமூடாக (www.infitt.org) இந்த கட்டுரைகளை பார்வையிட முடியும் . இந்த அமைப்பு தமிழ்க் கணிப்பொறித் துறையில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நோக்கில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதுடன், தமிழுக்கான உலகளாவிய எழுத்துருக்களை உருவாக்குதல், கணினி மூலம் தமிழ் கற்பித்தல், தமிழில் தேடுபொறிகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல ஆய்வுகளுக்குச் சிறப்பாகப் பங்களித்துவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்பு பேச்சுக்கள் வரிசையில் , பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் முனைவர் எம்.ஜெயக்குமார், தொழில்துறை 5.0 இன் பார்வையில் தமிழ்க் கல்வி குறித்த தனது ஆய்வை இம்மாநாட்டின் போது முன்வைக்கிறார்,மலேசியாவை சேர்ந்த முரசு அஞ்சல் நிறுவுனர் திரு.முத்து நெடுமாறன் அவர்கள் ஒருமைப்பாட்டைக் கண்டுவரும் மொழிக்கணிமையில் தமிழ்க்கணிமை என்னும் தலைப்பில் தனது ஆய்வுகளை முன்வைக்கிறார். பாரீஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் அப்பாசாமி முருகையன் இடைக்காலத் தமிழ் கல்வெட்டுகளைத் தற்போதைய தொழில்நுட்ப முன்னேற்றக்

கருவிகளோடு தேடுவது குறித்த தனது தற்போதைய ஆராய்ச்சியையும், பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர் வாசு அரங்கநாதன் தமிழ் ரோபோட்களை உருவாக்குவது குறித்த தனது தற்போதைய ஆராய்ச்சியை முன்வைக்கிறார்.

இவர்களுடன் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஆய்வாளர் திரு.பாலசுந்தரராமன், இலங்கை மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் முனைவர் உதயசங்கர், கூகுள் கார்ப்பரேஷனின் திரு.மெல்வின் ஜான்சன், யூனிகோட் கூட்டமைப்பின் திரு.ஜான் குசேரா, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முனைவர்.எம்.கணேசன், சென்னை இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி யை சேர்ந்த முனைவர். இ. பொன்னுசாமி., ஹைதராபாத் பல்கலைக்கழகத்தின் முனைவர் பரமேஸ்வரி, அமெரிக்காவைச் சேர்ந்த முனைவர் முத்து அண்ணாமலை மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் ஏயூ-கேபிசியின் முனைவர் சுப லலிதா தேவி ஆகியோர் தமிழ்க் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் குறித்த தங்களது சமீபத்திய ஆய்வுகளை எடுத்துரைத்து உரையாற்றுகிறார்கள்.

வழமை போல இந்த மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துப் பேச்சுகள் மற்றும் கட்டுரைகள் அடங்கிய மாநாட்டு நிகழ்ச்சிகள், தமிழ்க் கணினித் துறையில் சிறந்த அறிஞர்கள் மற்றும் நிர்வாகிகளின் கருத்துக்களையும் உள்ளடக்கிய மாநாட்டு நிகழ்ச்சிக் கட்டுரை நூல் ஒன்றை வெளியிடவும் உத்தமம் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இம்மாநாட்டில் ஆய்வாளர்களையும் மாணவர்களையும் தமிழ் தொழில்நுட்ப ஆர்வலர்களையும் தொழிற்துறை சார்ந்தவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு மாநாட்டு ஏற்பாட்டுக்குழு சார்பில் அழைப்பு விடுக்கப்படுகின்றது. மாநாட்டிற்கான பதிவுகளை மாநாட்டு இணையத்தளத்தில் மேற்கொள்ள முடியும்.

நன்றி